**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

| | |
|---|---|
| அசல் வழக்கு எண்.932/2015 | இ.ம.எண். |
| எம்.சி.ஓ.பி.எண். | நி.வே.ம.எண். |

**வா.சா.1 – நவீனா**

**குறுக்கு விசாரணை : 8,9 பிரதிவாதி தரப்பில்**

1ம் பிரதிவாதியின் அப்பா பெயர் சின்னப்ப கவுண்டர் என்றால் சரியல்ல சென்னிமலை கவுண்டர் ஆகும். எனது தாத்தா 1ம் பிரதிவாதியுடன் பிறந்தவர்கள் மூன்று சகோதரிகள் என்றால் சரிதான். அவர்கள் பெயர் இராமாயம்மாள், தங்கம்மாள் மற்றும் லட்சுமி ஆகும். தாவா 3ம் அயிட்டச் சொத்தானது 1ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கும் கிரைய வகையில் பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல கூட்டுக்குடும்ப சொத்தாகும். நான் தாக்கல் செய்துள்ள 1953 வருடத்திய வா.சா.ஆ.6 ஆவணத்தில் தாவா 3வது அயிட்டச் சொத்தானது 1ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு கிரைய வகையில் பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தாத்தாவின் அப்பா சென்னிமலைக் கவுண்டர் எந்த வருடம் இறந்தார் என்றால் 1991ம் வருடம் இறந்தார். சென்னிமலைக் கவுண்டரின் மனைவி அவருக்கு முன்பாகவே இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. சென்னிமலைக் கவுண்டர் இறந்தபிறகு எத்தனை வருடம் கழித்து அவரது மனைவி இறந்தார் என்றால் சுமார் 1998ம் வருடம் வாக்கில் இறந்துவிட்டார். 16.09.1953 வருடத்திய கிரைய ஆவணம் மூலம் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் சென்னிமலைக் கவுண்டருக்கு கிரைய வகையில் பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்களை அவரது சட்டப்படியான வாரிசுகளான ஒரு மகனான 1ம் பிரதிவாதியும் மற்றும் மூன்று மகள்களுக்கும் சேர்ந்து வா.சா.ஆ.6 கிரைய ஆவணம் மூலம் 6,7 பிரதிவாதிகளுக்கு தாவா 3ம் அயிட்டச் சொத்தை கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான், எங்களது உரிமையை மறைத்து மேற்படி கிரையம் கொடுத்துள்ளதால் அந்தக் கிரைய ஆவணமானது எங்களுக்கு பாத்தியப்பட்ட பங்குகளை கட்டுப்படுத்தாது. மேற்படி கிரைய ஆவணத்திலேயே தாவா 3வது அயிட்டச் சொத்தானது சென்னிமலைக் கவுண்டருக்கு கிரைய வகையில் சர்வ சுதந்திரமாக பாத்தியப்பட்ட சொத்து என்ற விவரம் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தாயார் சிவகாமி என்பவர் 2ம் பிரதிவாதிக்கு எதிராக ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி HMOP.140/2005 என்ற மனுவை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். கடந்த 2001ம் வருடம் வரை நானும் எனது சகோதரர் 5ம் பிரதிவாதி என் தாயார் ஆகிய எல்லோரும் 2ம் பிரதிவாதியான என் தகப்பனாருடன்

ஒன்றாக ஒரே குடும்பமாக வசித்து வந்தோம் என்றால் சரியல்ல. எந்த வருடம் என் அப்பா என் தாயாரை விட்டு பிரிந்தார் என்றார் 1998 ம் வருட வாக்கில் என் அம்மாவை விட்டு பிரிந்துவிட்டார். என் தாயார் தாக்கல் செய்த விவாகரத்து கோரும் மனுவிலேயே 2001 ம் வருடம் ஏப்ரல் மாதம் வரை என் அப்பாவுடன் ஒரே குடும்பமாக வாழ்ந்து வந்ததாக தெரிவித்துள்ளார் என்றும் அதை மறைத்து அதற்கு விரோதமாக தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ.6 ஆவணத்தில் எனக்கும் எனது சகோதரரான 5 ம் பிரதிவாதிக்கும் பாதுகாவலர் என்ற முறையில் என் அப்பா கையெழுத்து செய்துள்ளார் என்றால் என் அப்பா பாதுகாவலர் என்ற முறையில் எங்களுக்கு எதுவும் செய்யவில்லை. வா.த.சா.ஆ.6 ஆவணத்தின் மூலம் கிடைத்த பிரதிபலன்கள் எங்களுடைய நலனுக்காக 2 ம் பிரதிவாதியால் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.6 ஆவணம் எழுதப்பட்ட விவரம் என்னுடைய மற்றொரு பாதுகாவலரான எனது தாயாருக்கும் கடந்த 2000 ம் வருடத்திலேயே தெரியும் என்றும் மேற்படி கிரையத் தொகையை ஒரே குடும்பமாக இருந்து எல்லோரும் அனுபவித்ததினால்தான் என் தாயார் ஆட்சேபணை எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தாயாரின் வாக்குமூலத்தின்படி 2001 ம் வருடம் ஏப்ரல் மாதம் வரை ஒரே குடும்பமாக இருந்து வா.த.சா.ஆ.6 கிரைய ஆவணப்படி கிடைக்கப்பெற்ற பிரதிபலன் அடைந்ததை மறைப்பதற்காகத்தான் 1998 ம் வருடமே என் தந்தையும், தாயாரும் பிரிந்துவிட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்தபோதும் சாட்சியத்தின்போதும் தாவா சொத்துக்கள் சம்மந்தப்பட்ட முந்தைய ஆவணங்கள் எதையும் எனது தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா 3 வது அயிட்டச் சொத்திற்கு மூலப்பத்திரம் 1 ம் பிரதிவாதியின் தகப்பனாரின் பெயரில் உள்ள 16.09.1953 தேதியிட்ட கிரைய ஆவணத்தை தாக்கல் செய்தால் அதன் மூலம் தாவா 3 வது அயிட்டச் சொத்தானது பூர்வீகச் சொத்தோ, கூட்டுக்குடும்பச் சொத்தோ இல்லை என்ற விவரம் தெரிந்துவிடும் என்பதால்தான் மேற்கண்ட ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் அம்மா என் அப்பாவை விட்டு பிரிந்தபிறகு நானும் 5 ம் பிரதிவாதியான எனது சகோதரரும் தாயாருடன் ஒரே குடும்பமாக இருந்து வந்தோம் என்றால் சரிதான்.

எனக்கு எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் 2018 ம் வருடம் திருமணம் நடந்தது. என்னுடைய திருமணத்தை எனது தாயாரும் எனது சகோதரரான 5 ம் பிரதிவாதியும் சேர்ந்து நடத்தி வைத்தார்கள் என்றால் சரிதான். நான் சட்டப்படி உரிமையின் வயதை அடைவதற்கு 5 வருடங்களுக்கு முன்பாகவே 5 ம் பிரதிவாதி உரிமை வயதை அடைந்துவிட்டார் என்றால் சரிதான். என் சகோதரரான 5 ம் பிரதிவாதி உரிமை வயதை அடைந்தபிறகு தாவா சொத்தில் பாகம் கேட்டு வழக்கு எதுவும் போடவில்லை என்றால் சரிதான். என் தந்தை தாயாரை விட்டு பிரிந்த பிறகு நானும் 5 ம் பிரதிவாதியான எனது சகோதரரும் இளவர்களாக இருந்தபோது எங்களுக்காக என் தாயார் பாகம் கேட்டு வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2005 ம் வருடம் என் தாயார் தாக்கல் செய்த விவாகரத்து மனுவின் என் தகப்பனாருடன் ஏற்பட்ட சமரசத்தின்படி 2007 ம் வருடம் விவாகரத்து வழங்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கும் என் சகோதரருக்கும் தாவா சொத்து கூட்டுக்குடும்பச் சொத்து இல்லை என்ற விவரம் தெரிந்திருந்ததால்தான் என் தாயார் எங்களுக்காக பாகம் கேட்டு வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.6 கிரைய ஆவணத்தின்படி தாவா 3 வது அயிட்டடச் சொத்தை கிரையம் பெற்ற 6,7 பிரதிவாதிகள்தான் கிரையம் பெற்ற நாள் முதல் சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றும் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பின்னிட்டு வா.த.சா.ஆ.7 ஆவணத்தின்டி 6,7 பிரதிவாதிகளிடமிருந்து 8,9 பிரதிவாதிகள் தக்க பிரதிபலனுக்கு செக்குபந்தி குறிப்பிட்டு 30 சென்ட் பூமியை கிரையம் பெற்று கிரையத் தேதியிலிருந்து சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 6 முதல் 9 பிரதிவாதிகள் நல்லெண்ண கிரையதாரர்கள் என்றும் வா.த.சா.ஆ.6 கிரைய ஆவணத்ததின் படி என் தகப்பனார் மூலமாக கிரையப் பலன்களை நாங்கள் அனுபவித்துவிட்டு தற்போது மேற்படி கிரைய ஆவணத்தை மறுதலிக்க இயலாது என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.6 கிரைய ஆவணத்தை இரத்து செய்ய பரிகாரம் கோராமல் தாவா 3 வது அயிட்டச் சொத்தையும் சேர்த்து பாகம் கேட்டுள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா 3 வது அயிட்டச் சொத்தில் சட்டப்படி எனக்கு எவ்வித பங்கு பாத்தியமும் கிடையாது என்றால் சரியல்ல. தாவா 3 வது அயிட்டச் சொத்தைப் பொருத்து இந்த வழக்கு 8, 9 பிரதிவாதிகளுக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

8,9 பிரதிவாதிகள் இதர சங்கதிகளைப் பொறுத்து 1ம் பிரதிவாதித் தரப்பு குறுக்கு விசாரணையை முழுமையாக ஏற்றுக் கொள்கிறார்கள்.

14,16 முதல் 19 பிரதிவாதித் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.